கீழ்க்காணும் அறிக்கையில் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன :—

கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் கேட்ட உதவியின் தன்மை.	1962–63.		1963–64.	
	பதிவாளர் மனுச் செய்து கொண்ட தொகை.	அரசாங்கம் அனுமதித்த தொகை.	பதிவாளர் மனுச் செய்து கொண்ட தொகை.	அரசாங்கம் அனுமதித்த தொகை.
(1)	(2)	(3)	(4)	(5)
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
1 பால் வழங்கும் கூட்டுறவு சங்க அரிஜன உறுப்பினர்களுக்கு உதவித் தொகை.	6,00,000	3,75,000	4.51.850	3,50,000
2 அரிஜனங்களுக்கு வட்டியில்லாத பங்கு மூலதனம்.	23,400	23,400	50,000	50,000
3 பால் வழங்கும் கூட்டுறவு சங்கங்களுக்கு கறவை மாடுகள் வாங்கத் தேவையான கடன்.	14.00,000	14,00,000	15,00,000	15,00,000
4 கன்று போடாத இளம் பசு வாங்கக் கடன்.	..	..	4,00,000	4,00,000

குறிப்பு.—இக்கடன் தொகை பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பொதுவாக ஒதுக்கப்படும் தொகையைக் குறிக்கும். பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தின் அரிஜன உறுப்பினர்களுக்குக் கறவை மாடுகள் வாங்குவதற்காக அனுமதிப்பதற்கான நிதி ஒதுக்கமும் இதில் அடங்கும்.

APPENDIX V.

[*Vide* answer to starred question No. 609 on page 466 supra.]

(*a*) No.

(*b*) Not so far implemented.

(*c*) Ten quarters in the Government Estate, Mount Road, have been reserved for allotment to Members of the State Legislatures. Eight of these quarters have been allotted for occupation and are occupied by Members. The remaining two quarters are under the occupation of the families of deceased Members.

(*d*) The following rules govern the allotment of quarters in the Government Estate to Members of the State Legislature :—

(1) The Executive Engineer, Public Works Department, South Presidency Division, shall be in charge of the buildings but the power to allot the buildings shall vest with the Government. A register of applications shall be maintained to watch the disposal of applications.

(2) All applications for allotment of residential buildings shall be sent to the Secretary to Government, Public Works Department.

[21st July 1964

(3) Buildings reserved for the Members of the State Legislature shall be allotted by casting of lots and not in strict order of priority.

(4) The rent chargeable will be fair economic rent fixed by the Government.

(5) In addition to rent, the occupants of the residential buildings shall pay stree lighting charges, if leviable and electricity consumption charges, besides service taxes.

(6) The allottee's liability for rent shall commence from a date one week after the date of receipt of the order of allotment or from the date of occupation of the quarters, whichever is earlier. If the allottee is unwilling to occupy the quarters, he shall intimate his unwillingness to the Executive Engineer, South Presidency Division (with copy to the Government, Public Works Department), within three days from the date of receipt of the order of allotment by *registered post acknowledgment due*, failing which, rent shall be recovered from him from the lapse of the three days limit up to the actual date of receipt of the intimation by the Executive Engineer, South Presidency Division.

(7) The quarter shall on no account be sublet or shared with other Government servants or anybody for that matter, without the prior sanction of the Government which shall be applied for through the Executive Engineer, Public Works Department, South Presidency Division.

(8) Rent for the buildings occupied by the Legislators has to be paid by them in cash on the first of the succeeding month. If the rent for a particular month is however not realised before the 15th of the succeeding month, the Executive Engineer, Public Works Department, South Presidency Division, Madras, should issue a registered notice to the occupant Member with acknowledgment due, for the recovery of rent. If the rent is not paid within one week from the date of the receipt of the registered notice, the Executive Engineer, South Presidency Division, should take action for the eviction of the occupant Member. If there is any difficulty, the Executive Engineer should address the Accountant-General, Madras, for the recovery of the arrears.

(9) The following instructions shall govern the maintenance of cattle by the residents of the Government Estate within the compound of the Estate :—

(i) Residents of the Government Estate, including employees of the Public Works Department, the gardeners and the Sanitary Establishment shall not maintain cattle.

(ii) If any such person maintain cattle either in his name or in any one else's name the allotment of the quarters to him will be cancelled and he shall be evicted from the quarters immediately.

21st July 1964]

(iii) If any cattle is found straying or grazing in the compound of the Government Estate, the same shall be seized, and confined under Section 60 of the Madras City Police Act, 1888 (Madras Act III of 1888) in the Cattle pound maintained for the purpose in Police Stations.

(அ) இல்லை.

(இ) இதுவரை எதுவும் கட்டப்படவில்லை.

(உ) மவுண்ட் ரோட்டிலுள்ள கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் 10 வீடுகள் மாநில சட்டப்பேரவை உறுப்பினர்களுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் எட்டு வீடுகள் உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டு உறுப்பினர்கள் குடியிருந்து வருகிறார்கள். எஞ்சிய இரண்டு வீடுகளிலும் இறந்துபோன உறுப்பினர்களின் குடும்பத்தினர் குடியிருந்து வருகிறார்கள்.

(எ) அரசாங்க எஸ்டேட்டிலுள்ள வீடுகள் மாநிலச் சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு கீழ்க்கண்ட விதிகளை அனுசரித்து ஒதுக்கப்படுகின்றன :—

(1) இந்த வீடுகள் பொதுப்பணித்துறை, சவுத் பிரசிடென்சி டிவிஷன் எக்ஸிக்யூட்டிவ் எஞ்சினீயரின் பொறுப்பில் உள்ளன. ஆனால், வீடுகளைக் கொடுக்கும் அதிகாரம் அரசினருக்கே உரியது. மனுக்களைப் பதிந்துக்கொள்ள ஒரு பதிவேடு வைத்து வருகிறார்கள். இதில் அந்த மனுக்கள் எப்படிப் பைசல் செய்யப்படுகின்றன என்பதும் குறித்து வைக்கப்படுகிறது.

(2) குடியிருப்பு வீடுகளுக்காகச் செய்துகொள்ளப்படும் மனுக்கள் அனைத்தையும் பொதுப்பணித்துறை, அரசாங்கச் செயலாளருக்கு அனுப்ப வேண்டும்.

(3) மாநிலச் சட்டப் பேரவை உறுப்பினர்களுக்குச் சீட்டுக் குலுக்கிப் போட்டு வீடுகள் ஒதுக்கப்படும். இவர்கள் மனுக்கள் அனுப்பிய வரிசைக் கிரமத்தில் இவர்களுக்கு வீடுகள் ஒதுக்கப் படுவதில்லை.

(4) அரசினர் நிச்சயிக்கும் நியாயமான குறைந்த வாடகை வாங்கப்படும்.

(5) வீடுகளில் வசிப்பவர்கள் வாடகையுடன், தெருவிளக்குக் கட்டணம், மின்சாரக் கட்டணம், தண்ணீர் வரி முதலியவற்றையும் செலுத்த வேண்டும்.

(6) வீடு கொடுக்கப் பெறுபவர் ஆணை பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து ஒரு வாரம் கழித்து அல்லது குடிபுகுந்த தேதி இவற்றில் எது முந்தியோ அது முதல் வாடகை செலுத்திவர வேண்டும். வீடு கொடுக்கப்பெற்றவர் வீட்டில் குடிபுக விரும்பாவிட்டால், அவர் ஆணை பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து மூன்று தினங்களுக்குள், தெற்கு பிரெசிடென்சி டிவிஷன் எக்ஸிக்யூட்டிவ் என்ஜினீயருக்கு அதைத் தெரிவித்து பதிவுத் தபாலில் கடிதம் ஒன்றை அனுப்பவேண்டும். இதன் நகலை சென்னை அரசாங்கப்

[21st July 1964

பொதுப்பணித்துறைக்கு அனுப்பவேண்டும். இவ்வாறு அனுப்பத் தவறினால், மேற் சொன்ன மூன்று நாட்கள் கழித்து தெற்கு பிரசிடென்சி டிவிஷன் எக்ஸிக்யூட்டிவ் என்ஜினீயருக்குப் பின்னால் தகவல் அனுப்பும் தேதிவரை அவரிடமிருந்து வாடகை வசூலிக்கப் படும்.

(7) அரசினரின் முன் அனுமதியின்றி ஷை குடியிருப்புக்காக எந்தக் காரணத்தைக் கொண்டும், இன்னொருவருக்குக் கீழ்க் குடித்தனத்துக்கு விடவுங்கூடாது அல்லது அவற்றில் மற்ற அரசாங்கப் பணியாளர்களுடன் சேர்ந்து குடியிருக்கவுங்கூடாது. (இந்த அனுமதிக்காக பொதுப்பணித்துறை சவுத் பிரசிடென்சி டிவிஷன், எக்ஸியூட்டிவ் என்ஜினீர் மூலமாக அரசாங்கத்துக்கு மனுச் செய்து கொள்ளவேண்டும்).

(8) சட்டப்பேரவை உறுப்பினர்கள் குடியிருப்புக்காக எடுத்துக்கொண்ட விடுகளுக்கு அடுத்து வரும் மாதம் முதல் தேதி யன்று வாடகை ரொக்கமாகச் செலுத்திவிடவேண்டும். குறிப்பிட்ட ஒரு மாத வாடகை அடுத்துப் பின்வரும் மாதத்தின் 15-ம் தேதிவரை செலுத்தப்படாமலிருந்தால், சென்னை பொதுபணித் துறை தெற்கு பிரசிடென்சி டிவிஷன் எக்ஸிக்யூட்டிவ் என்ஜினீயர் சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கு வாடகை வசூலிப்புக்காக ஒரு நோட்டீசை பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். பதிவுத் தபாலில் நோட்டீஸ் பெற்ற தேதிக்கு ஒரு வாரத்துக்குள் வாடகை செலுத்தா விட்டால் தெற்கு பிரசிடென்சி எக்ஸிக்யூட்டிவ் என்ஜினீயர் அவரை அவ்விட்டினின்றும் வெளியேற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும். தொகை வசூலிப்பதில் கஷ்டம் ஏதேனும் ஏற்பட்டால் எக்ஸிக்யூட் டிவ் என்ஜினியர் சென்னை அக்கவுண்டன்ட் ஜெனரலுக்கு எழுதி நிலுவையை வசூலிக்கும்படிக் கேட்க வேண்டும்.

(9) கவர்மெண்ட் எஸ்டேட்டில் குடியிருப்பவர்கள் எஸ்டேட் காம்பவுண்டுக்குள் கால்நடைகளை வைத்து வருவதைக் கீழ்க்கண்ட விதிகள் முறைப்படுத்தும் :—

(i) பொதுப் பணியாளர்கள் தோட்டக்காரர் துப்புறவு பணியாளர் உட்பட்ட கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் குடியிருப்ப வர்கள் எவரும் கால் நடைகளை வளர்க்கக்கூடாது

(ii) அரசினர் விசேஷ அனுமதியின்றி ஒருவர் தம்முடைய பெயரிலோ அல்லது இன்னொருவருடைய பெயரிலோ கால்நடைகளை வளர்த்து வந்தால் அவருக்கு விடு ஒதுக்கப்பட்டுள்ளது ரத்து செய்யப்பட்டு, அவ்விட்டினின்று அவர் உடனடியாக வெளியேற் றப்படுவார்.

(iii) கால்நடை எதுவாகிலும் கவர்ன்மெண்ட் எஸ்டேட் காம்பவுண்டிற்குள் அலைந்துகொண்டிருப்பதாக அல்லது மேய்ந்து கொண்டிருப்பதாகக் காணப்பட்டால் அது 1888-ம் ஆண்டு சென்னை நகர போலீசுக் சட்டத்தின் (சென்னைச் சட்டம் 3/1888) 60-வது பிரவின்கீழ்க் கைப்பற்றப்பட்டு, இதற்காக போலீஸ் ஸ்டேஷன் களில் வைத்துள்ள கால்நடைப் பட்டிகளில் அடைக்கப்படும்.